

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா எம்பி. புதுக்கோட்டை மாவட்டம்,ஆலங்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினரும், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் திருமதி சரிதா இல்ல விழாவில் பங்கேற்று குழந்தை செல்வங்கள் த.அஞ்சுகம், த.கயல்விழி, த.தனலெட்சுமி ஆகியோரை வாழ்த்தினார். சுற்றுசூழல் கால நிலை மாற்றம் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்,டாக்டர் வை.முத்துராஜா எம்எல்ஏ, கழக சார்பு அணி மாநில நிர்வாகிகளான த.சந்திரசேகரன்,அஞ்சுகாமீனாட்சி சுந்தரம், அரு.வீரமணி,சுப.சரவணன், கேஆர்.என்.போஸ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கீரை.தமிழ்செல்வன்,சு.சண்முகம், உதயம் சண்முகம்,சக்தி.ராமசாமி, மாவட்ட துணை செயலாளர் க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி,பிஆர்ஓ.பா.சக்திவேல்,வீர.சரவணன் மற்றும் கழக மாவட்ட, பேரூர், ஒன்றிய நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

## பின்லாந்தில் புதிய மோட்டார் சைக்கிள் அறிமுகம்!

பின்லாந்து, மே 19 -

பின்லாந்தை சேர்ந்த எலெக்ட்ரிக் மோட்டார்சைக்கிள் உற்பத்தியாளரான வெர்ஜ் மோட்டார்சைக்கிள்ஸ் தனது லிமிடெட் மைகா ஹகினென் சிக்னேச்சர் எடிஷன் மாடலை அறிமுகம் செய்து இருக்கிறது. இந்த இ பைக் மொத்தத்திலேயே 100 யூனிட்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட இருக்கிறது. இதன் விலை 80 ஆயிரம் யூரோக்கள், இந்திய மதிப்பில் ரூ. 71 லட்சத்து 48 ஆயிரம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

வெர்ஜா மைகா ஹகினென் சிக்னேச்சர் எடிஷன் மாடல் வெர்ஜ் மற்றும் மைகா ஹகினென் இடையேயான கூட்டணியை பிரதிபலிக்கும் வகையில் அமைந்து இருக்கிறது. இரண்டு முறை F1 பந்தயம் வென்ற மைகா ஹகினென் இந்த நிறுவனத்தில் முதலீடு செய்திருப்பதோடு, இந்த பைக்கின் டிசைனிங் பணிகளில் உதவியாக இருந்து வந்துள்ளார்.

### தமிழ்நாடு முழுவதும் 1299 இடங்களில்

# ரூ.299 கோடி செலவில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள்!

## மயிலாடுதுறையில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டி

நாகை. மே.18 -

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியத்தில் பெரியார் சமத்துவபுரத்தில் வீடு புரணைக்கும் பணி பணி, வாய்க்கால், குளம் தூர்வாரும் பணி மற்றும் பள்ளி கட்டிடங்கள் கட்டுமான பணிகளை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆய்வு செய்தார்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம் காட்டுச்சேரி ஊராட்சியில் காட்டுச்சேரி பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் வீடு புணரமைக்கும் 5 பணிகள் ரூ. 2.50 இலட்சம் செலவில் வீடு மறு கட்டுமான 95 பணிகள் ரூ. 399 இலட்சம்செலவிலும், இதர 9 மணிகளுக்கு ரூ. 52.30 இலட்சம் செலவிலும் என 109 பணிகள் ரூ.4.53 கோடி செலவில் வீடு கட்டும் பணிகளையும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஊரக பகுதியில் உள்ள நீர்நிலை நிலைகளை புதுப்பித்தல் கூறுகளின் கீழ் ரூ. 6.13 மதிப்பீட்டில் செம்பனார்கோயில் ஒன்றியம் காழியப்பநல்லூர் ஊராட்சி அய்யனார்கோயில் குளம் தூர்வாருதல், வரத்து வாய்க்கால் படித்துறை மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் பணியினையும், திருக்கடையூர் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 2022-2023 ஆம் ஆண்டு குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ர. 27 இலட்சம் மதிப்பீட்டில் 2 வகுப்பறை கட்டும் பணி, 2021-2022 ஆம் ஆண்டு பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 18.50 இலட்சம் மதிப்பீட்ல் 2 வகுப்பறை கட்டும் பணியினை என ரூ.5.04 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பாரத பிரதமரின் வீடுகட்டும் திட்டம்,

### ஆய்வுக் கூட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தூய்மை பாரத இயக்கத்திட்டம், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய வளர்ச்சித் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந் நிகழ்ச்சிகளில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச்

செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம், மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, இராம.இளங்கோவன், மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம். சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஞான.இமையநாதன், மூவலூர் எம். மூர்த்தி, என்.இளையபெருமாள், முருகமணி, பி.எம். அன்பழகன், எம்.அப்துல்மா



லிக், அமுர்த.விஜயகுமார்,

ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், செல்லசேதுரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், தகவல் தொழில் நூட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.வெற்றிவேல், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் நத்தம் வின்சென்ட், காந்தி, பி.சிவதாஸ், என்.சுபாநெடுஞ்செழியன், கபிலன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக்குழு தலைவர்கள்

செம்பனார்கோயில் நந்திஸ்ரீதர், சீர்காழி கமலஜோதிதேவேந்திரன், குத்தாலம் மகேந்திரன், கொள்ளிடம் ஜெயபிரகாஷ், மயிலாடுதுறை காமாட்சிமூர்த்தி, நகர்மன்ற தலைவர்கள் மயிலாடுதுறை குண்டாமணி (எ) என்.செல்வராஜ், சீர்காழி துர்க்காபரமேஸ்வரி, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரி, உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வு கூட்டத்திற்கு பின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் 3 சட்டப் பேரவை தொகுதிகள் உள்ளடக்கிய பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. குhலை காட்டுச்சேரி சமத்துவபுரம், திருக்கடையூரில் வகுப்பறைக் கட்டும் பணிகளை ஆய்வு செய்யப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் உன்னத திட்டமான காலை உணவுத் திட்டம் அனைத்து பள்ளிகளிலும் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. பள்ளி மாணவர்களுக்கு சிறந்த உட்கட்டமைப்பு உருவாக்க புதிய வகுப்பறை

கட்டிடம், சமையல் கூட கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவுப்படி ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 6 ஆயிரம் வகுப்பறை கட்டிடங்கள் ரூ. 823 கோடி மதிப்பீட்டில் ஜனவரி மாதம் முதல் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி முதல் அனைத்து மாவட்டங்களிலும் புதிய

பள்ளிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறத. இப்பள்ளிகளில் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. ஜூயஅயீ;ன் மாதம் தமிழகத்தில் 5 முறை முதலமைச்சராக பொற்கால ஆட்சி நடத்திய முத்தமிழ்அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்க நாளில் மாணவர் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும். இப்பணிகளை ஆய்வு செய்ய அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று வருகிறேன். தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட பின்த ற்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டேன்.

இன்னும் 15 நாட்களில் புதிய வகுப்பறை கட்டும் பணி நிறைவடையும், இது வரை 90 சதவீத பணிகள் நிறைவடைதுள்ளன. ஏந்த அரசும் செய்யாத காரியத்தை நமது முதல்வர் பழுதடைந்த பள்ளிகளை நீக்கி புதிய பள்ளி கட்டிடங்கள்கட்டும் தலைசிந்த திட்டத்தை கொண்டு வந்தார். கிராமப்புறம், நகர்ப்புறம், மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலைகள் இணைக்கும் திட்டம் 10,000 கி.மீ. தூரம் ரூ. 4 ஆயிரம் கோடி மதிப்பிட்டில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் மிக விரைவில் தொடங்கப்படும். இப்பணிகளை தொடங்கி நான்கு மாதத்தில் நிறைவடையும். ஆனைத்து கிராமப் புறங்களிலும் மாணவர்கள், விவசாயிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மக்கள் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 2.23 லட்சம் வீடகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பட்டா வழங்காமல் உள்ளவர்களுக்கு மிக விரைவில் பட்டா வழங்கப்படும். நான் அமைச்சராக பொறுப்பு ஏற்ற பின்னர் தமிழகம் முழுவதும் 14 ஆயிரம் பயனாகிளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. பெரியார் நினைவு சமத்துவ புர திட்டம் தலைசிறந்த திட்டமாகும். காட்டுச்சேரியில் 95

வீடுகள் மிக சிறப்பாக கட்டும் பணி நடைபெற்று வருகிறன்றன. ஊரக பகுதிகளில் குடி நீர், தெருவிளக்கு வசதி, நீர்தேக்க தொட்டி, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கும் தற்போது நிதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேல்நிலை நீர்தேக்க தொட்டி தமிழகம் முழுவதும் 1299 இடங்களில் ரூ. 299 கோடி செலவில் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. மயிலாதுறை மாவட்டத்தில் மிக விரைவில் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும். மக்களின் தேவைகளை அறிந்து தமிழக முதலமைச்சர் சிறந்த முதலமைச்சராக செயல்பட்டு வருகிறார்.

இவ்வாறு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி

செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் தொடர் சட்டப் போராட்டத்தின் விளைவாக, ஜல்லிக்கட்டுக்கு தடையில்லை என உச்ச நீதிமன்றத் தீர்ப்பை பெற்றுத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் நகர திமுக சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் இனிப்பு வழங்கி, பட்டாசு வெடித்து கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் வை.முத்துராஜா, எம்.சின்னத்துரை மற்றும் அரு.வீரமணி, பெ. ராஜேஸ்வரி, எம்.லியாக்கத் அலி, ஆ.செந்தில், தென்னலூர் எம்.பழனியப்பன், முனைவர் செ.குறிஞ்சிவாணன், பூங்குடி சிவா, மு.கலைஞர் கருணாநிதி, ஏ.வெற்றிச்செல்வம், சி.அரங்கநாயகம், த.சிவக்குமார், வி.ஆர்.எம்.தங்கராஜ், டி.குமார், மெய்க்குடிப்பட்டி முருகேசன், சுமோ பாலு, சதீஷ், அ.ரெத்தினம், மா.மணிவேலன், ராமலிங்கம், ரபீக், க.ராஜேந்திரன், விஜய் முருகேசன், பிரேம் ஆனந்த், காசி இளங்கோவன், ராமச்சந்திரன், மாலையீடு பிரபு, ச.அருண்குமார், காதர் கனி, கவிவேந்தன், பால்ராஜ், மூர்த்தி, நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.கணேஷ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# மாநகர- ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக இளைஞரணி சார்பில் தெருமுனைக் கூட்டங்கள்!



## மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் மாநகரம், நகரம், ஒன்றியம், பேரூர் கழக வாரியாக இளைஞர் அணி சார்பில், இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள் கீர்க்கண்டவாறு நடைபெறுகிறது.

| தேதி & நேரம் | தலைமை கழக பேச்சாளர்கள் | மாநகரம் / நகரம் / ஒன்றியம் / பேரூர் | இடம் |
|---|---|---|---|
| 20.05.2023 – 4 மணி | ஆரணி மாலா | உத்திரமேரூர் பேரூர் | பேரூர் |
| 20.05.2023 – 5 மணி | ஆரணி மாலா | உத்திரமேரூர் ஒன்றியம் | கருவேப்பம்பூண்டி |
| 20.05.2023 – 6 மணி | ஆரணி மாலா | உத்திரமேரூர் ஒன்றியம் | ஆதவப்பாக்கம் |
| 20.05.2023 – 7 மணி | ஆரணி மாலா | காஞ்சிபுரம் தெற்கு | வேடல் |
| 21.05.2023 – 4 மணி | ஆரணி மாலா | காஞ்சிபுரம் தெற்கு | திருவள்ளூர் குடியிருப்பு |
| 21.05.2023 – 5 மணி | ஆரணி மாலா | காஞ்சிபுரம் வடக்கு | விப்பேடு |
| 21.05.2023 – 6 மணி | ஆரணி மாலா | காஞ்சிபுரம் வடக்கு | கீழ்க்கதிர்பூர் |
| 21.05.2023 – 7 மணி | ஆரணி மாலா | வாலாஜாபாத் வடக்கு | வேடல் |
| 20.05.2023 – 4 மணி | தக்கோலம் தேவபாலன் | வாலாஜாபாத் வடக்கு | சேக்காங்குளம் |
| 20.05.2023 – 5 மணி | தக்கோலம் தேவபாலன் | வாலாஜாபாத் தெற்கு | தென்னேரி |
| 20.05.2023 – 6 மணி | தக்கோலம் தேவபாலன் | வாலாஜாபாத் தெற்கு | திம்மராஜாம்பேட்டை |
| 20.05.2023 – 7 மணி | தக்கோலம் தேவபாலன் | வாலாஜாபாத்பேரூர் | பேரூர் |
| 21.05.2023 – 4 மணி | தக்கோலம் தேவபாலன் | மதுராந்தகம் வடக்கு | மாமண்டூர் |
| 21.05.2023 – 5 மணி | தக்கோலம் தேவபாலன் | மதுராந்தகம் வடக்கு | புக்கதுறை |
| 21.05.2023 – 6 மணி | தக்கோலம் தேவபாலன் | மதுராந்தகம் தெற்கு | ககாட்டுதேவதூர் |
| 21.05.2023 – 7 மணி | தக்கோலம் தேவபாலன் | மதுராந்தகம் தெற்கு | முதுகரை |
| 20.05.2023 – 4 மணி | நாதிகம் நாகராஜன் | கருங்குழி பேரூர் | பேரூர் |
| 20.05.2023 – 5 மணி | நாதிகம் நாகராஜன் | மதுராந்தகம் நகரம் | நகரம் |
| 20.05.2023 – 6 மணி | நாதிகம் நாகராஜன் | அச்சரப்பாக்கம் வடக்கு | கூடலூர் |
| 20.05.2023 – 7 மணி | நாதிகம் நாகராஜன் | அச்சரப்பாக்கம் வடக்கு | திட்டலாம் |
| 20.05.2023 – 4 மணி | கலைச்செல்வி ஜகந்நாதன் | அச்சரப்பாக்கம் பேரூர் | பேரூர் |
| 20.05.2023 – 5 மணி | கலைச்செல்வி ஜகந்நாதன் | அச்சரப்பாக்கம் தெற்கு | தொழுபேடு |
| 20.05.2023 – 6 மணி | கலைச்செல்வி ஜகந்நாதன் | அச்சரப்பாக்கம் தெற்கு | ஆத்தூர் |
| 20.05.2023 – 7 மணி | கலைச்செல்வி ஜகந்நாதன் | சித்தாமூர் மேற்கு | புலியரணை |
| 22.05.2023 – 4 மணி | சேப்பாக்கம் பிரபபாகரன் | சித்தாமூர் மேற்கு | அரப்பேடு |
| 22.05.2023 – 5 மணி | சேப்பாக்கம் பிரபபாகரன் | சித்தாமூர் கிழக்கு | சித்தூர் |
| 22.05.2023 – 6 மணி | சேப்பாக்கம் பிரபபாகரன் | சித்தாமூர் கிழக்கு | கடுகலூர் |
| 22.05.2023 – 7 மணி | சேப்பாக்கம் பிரபபாகரன் | இடைக்கழி நாடு | பேரூர் |
| 21.05.2023 – 4 மணி | முரசொலி மூர்த்தி | இலத்தூர் வடக்கு | காதங்கடை |
| 21.05.2023 – 5 மணி | முரசொலி மூர்த்தி | இலத்தூர் வடக்கு | கல்குளம் |
| 21.05.2023 – 6 மணி | முரசொலி மூர்த்தி | இலத்தூர் தெற்கு | செங்காட்டூர் |
| 21.05.2023 – 7 மணி | முரசொலி மூர்த்தி | இலத்தூர் தெற்கு | வடபட்டினம் |
| 20.05.2023 – 4 மணி | மங்களம் பிரபாகரன் | சாலவாக்கம் ஒன்றியம் | சேந்தான்குளம் |
| 20.05.2023 – 5 மணி | மங்களம் பிரபாகரன் | சாலவாக்கம் ஒன்றியம் | ஒழையூர் |
| 20.05.2023 – 6 மணி | மங்களம் பிரபாகரன் | திருக்கழுக்குன்றம் தெற்கு | வழுவத்தூர் |
| 20.05.2023 – 7 மணி | மங்களம் பிரபாகரன் | தருக்கழுக்குன்றம் தெற்கு | வாயலூர் |
| 21.05.2023 – 4 மணி | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் | காஞ்சிபுரம் பகுதி –1 | ஒலிமுகம்மதுபேட்டை |
| 21.05.2023 – 5 மணி | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் | காஞ்சிபுரம் பகுதி –2 | ராஜாஜி மார்க்கெட் |
| 21.05.2023 – 6 மணி | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் | காஞ்சிபுரம் பகுதி –3 | ஓரிக்கை |
| 21.05.2023 – 7 மணி | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் | காஞ்சிபுரம் பகுதி –4 | பிள்ளையார் பாளையம் |

சம்பந்தப்பட்ட, மாநகர நகரம், ஒன்றிய, பேரூர் இளைஞரணி அமைப்பாளர்கள், அந்தந்த பகுதிக்கு உட்பட்ட ஒன்றிய செயலாளர்களுடன் இணைந்து அவர்களின் ஆலோசனைப்படி கூட்ட அழைப்பிதழை அச்சிட்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொள்ளுமாறும், இக்கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

### புழல் எம். நாராயணன் முன்னிலையில் நா. மோகன்குமார் - இ. கண்ணப்பன் தலைமையில்

# 16 வது வட்ட இளைஞரணி சார்பில் சாதனை விளக்கக் கூட்டம்

## முனைவர் கோவி. செழியன்- மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மே 19 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் ,கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம், மாதவரம் வடக்கு பகுதியில் 16 வது வட்டம் கன்னியம்மன் பேட்டை பகுதியில் 19 - 5 - 2023 மாலை 6 மணி அளவில் நடைபெறுகிறது.

மாவட்ட பிரதிநிதி நா, மோகன் குமார் நாகூரார் தலைமையில் நடைபெறும் இந்த பொதுக்கூட்டத்திற்கு, வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் வரவேற்று பேசுகிறார்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலை வகிக்கிறார். மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ 300 தாய்மார்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

தமிழ்நாடு அரசின் கொறடா முனைவர் கோவி. செழியன் மற்றும் தலைமை கழக சொற்பொழிவாளர் பசும்பொன் ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலாநிதி வீராசாமி எம்.பி, கே. பி .சங்கர் எம்.எல்.ஏ ,மாதவரம் தொகுதி தலைமைக் கழக பார்வையாளர் நா. சந்திரபாபு ,மிசா மதிவாணன், ராமநாதன், வி. கண்ணதாசன், வீ.கவி. கணேசன், குறிஞ்சி கணேசன், மு. ராஜேந்திரன், டி. ராமகிருஷ்ணன், பி. அறிவழகி பாலகிருஷ்ணன், எம். ஆனந்தன், ஜெ .ஜெயமதன் ,என். பரந்தாமன், டி.வி. ராஜி, இரா.முருகேசன் ,பி. சாந்தி, ஜி. துக்காராம், ஏவி. ஆறுமுகம், தி. மு. தனியரசு, எஸ். நந்தகோபால், வை. ம.அருள்தாசன்,பெ. சரவணன், மீ. வே. கருணாகரன், ஜி. தயாளன், ஜி. ராஜேந்திரன், வி. திராவிட வீரன், க. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், எஸ். கௌளி, ஆர். முரளி, பி. தரணி க. காசிநாதன், பி. நிர்மல் குமார், சே. செல்வன், வி. கார்த்திகேயன், வி. சந்திரன், கே. ராஜா, பி. நாகுரார், ஜே. ஏழுமலை, கே. ஏழுமலை, என். நீதி, கே. முனிவேல், நா. மகேஷ்குமார், கே அங்குசாமி கே .கருணாகரன், கா. தாமரைச்செல்வன், பி. எஸ் சந்துரு, வி. ரா. குப்பன், நந்தினி சண்முகம் மற்றும் 16 வது வட்ட கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள்.

பதினாறாவது வட்டக் கழக நிர்வாகிகள் இ. அருள், இ. வெங்கடேசன் ,என். பரசுராமன், எம். புவனேஸ்வரி மகேஷ்குமார், இ. குமரவேல், கே. ராஜ் மோகன், சி. முத்தையா, வி. மாரி, கே. ஏ. ரமேஷ் ,சி. உத்திராஜ் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

எம். பரணி மோகன் குமார் நன்றி கூறுகிறார்.



வேலூர் சட்டமன்ற தி.மு.க.விற்கு உட்பட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகளுக்கான சிறப்பு கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. இதில் மாநகர தி.மு.க. செயலாளர் ப. கார்த்திகேயன் எம். எல். ஏ. சிறப்புரையாற்றினார். இதில் மாநில சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் ஓசூர் விஜயகுமார், மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகர அவைத்தலைவர் சூரி என்ற கோவிந்தன், நா.அசோகன்,கதிரேசன் , நூருல்லா மற்றும்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.